இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 27.03.2026

# கொரோனா காலத்தைப் போலவா..?

“கொரோனா காலத்தில் உங்களைக் காத்ததைப் போல இந்தப் போர்க் காலத்திலும் மக்களைக் காப்பேன்” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. இவர் சும்மா இருந்தாலே மக்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்வார்கள். கொரோனா காலம் என்று சொல்லி மக்களை பீதியடைய வைக்க வேண்டாம்.

**கொரோனா காலத்தில் இந்திய நாட்டு மக்களை நான் எப்படிக் காத்தேன் என்பதை பிரதமர் மோடி சொன்னாரா என்றால் இல்லை. சொல்ல முடியுமா என்றால் முடியாது! கொரோனாவை விடக் கொடூரமான ஆட்சியை அல்லவா பிரதமர் மோடி நடத்தினார்.**

2019 டிசம்பரில் கொரோனாவின் பாதிப்பு உலக நாடுகளில் பரவியது. பல நாடுகள் ஊரடங்கு அறிவித்து விட்டன. வெளிநாட்டவர் வருகையை தடுத்துவிட்டார்கள். 2020 ஜனவரி 29ம் தேதி நிருபர்களைச் சந்தித்த ஒன்றிய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன், “இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு யாருக்கும் இல்லை, மக்கள் அச்சம் அடைய வேண்டாம். 2014 இல் எபோலோ வைரஸை இந்தியாவுக்குள் வராமல் தடுத்தோம். அதைப் போல கொரோனாவையும் வரவிடாமல் தடுத்துவிடுவோம்” என்று சொன்னார். “கொரோனா பாதிப்பில் இருந்து மீள்வதற்கு சீனாவுக்கு உதவ இந்தியா தயாராக உள்ளது. உயிரிழப்புகள் துரதிருஷ்டவசமானவை. உங்களுக்கு இந்தியா துணை நிற்கும்” என்று சீனாவுக்கு கடிதம் எழுதிக் கொண்டு இருந்தார் பிரதமர் மோடி. உலகம் முழுக்க 2000 பேர் இறந்து விட்டதாக புள்ளிவிவரம் சொல்லிக் கொண்டு இருந்தபோதுதான் இந்தியாவுக்குள் வருகிறார் அமெரிக்க அதிபர் டிரம்ப். குஜராத் மைதானத்தில் பல்லாயிரக்கணக்கானவர்களைத் திரட்டி வைத்துக் கொண்டு அமெரிக்க அதிபரோடு நின்றார் பிரதமர்.

**அதற்குள் கொரோனா வைரஸ் இந்தியாவுக்குள் பரவிவிட்டது. மார்ச் 15 ஆம் தேதி இந்தியாவில் பாதிக்கப்பட்டவர் எண்ணிக்கை 84 ஆகி, இரண்டு பேர் பலியானார்கள் என்பதற்குப் பிறகு தேசியப் பேரிடர் என்று மத்திய அரசாங்கம் அறிவித்தது. மூன்று மாதங்கள் கழித்து 2020 மார்ச் 25 ஆம் தேதிதான் ஊரடங்கு அறிவித்தது. 100 நாட்கள் கழித்துதான் இவர்கள் கொரோனாவின் தாக்கத்தையே உணர்ந்தார்கள். ‘நாட்டு மக்களிடம் ஊரடங்கு அறிவிப்புக்காக மன்னிப்புக் கேட்கிறேன்’ என்று பிரதமர் அறிவித்தார்.**

2020 ஜனவரி முதல் வாரத்தில் செய்திருக்க வேண்டியதை மார்ச் கடைசி வாரத்தில் செய்ததன் விளைவுதான் கொரோனா பலிகள், பாதிப்புகள், துன்பங்கள், துயரங்கள்.

**மருத்துவமனையில் படுக்கைகள் இல்லை, ஆக்சிஜன் சிலிண்டர்கள் இல்லை, வெண்டிலேட்டர்கள் இல்லை, தடுப்பூசிகள் இல்லை என்ற நிலைமையில்தான் நாட்டை வைத்திருந்தார் மோடி. ஒரு சில குறிப்பிட்ட நிறுவனங்களின் ஆதிக்கத்தில் தடுப்பூசியை தக்க வைக்க ஒன்றிய அரசு அனுமதி அளித்ததன் விளைவே தடுப்பூசித் தட்டுப்பாடு. தடுப்பூசித் தட்டுப்பாட்டை செயற்கையாக உருவாக்கினார்கள்.**

**கோடிக்கணக்கானவர்கள் வேலை இழந்தார்கள். அவர்களுக்கு எந்த இழப்பீடும் வழங்கவில்லை பிரதமர் மோடி.**

ஊரடங்கு போட்டுவிட்டால் போதும் என்று நினைத்தார் பிரதமர். ஒரு மாநிலத்தை விட்டு இன்னொரு மாநிலம் போய் வாழ்பவர்கள், தங்கள் மாநிலத்துக்குச் செல்ல எந்த வாய்ப்பும் ஏற்படுத்தித் தரவில்லை பிரதமர் மோடி. ஊரடங்கு போட்ட பிரதமர் மோடி, அந்த மக்களுக்கு வாகனப் போக்குவரத்து கூட ஏற்பாடு செய்யவில்லை. பல நூறு கிலோ மீட்டர் தூரம் தலையில் பொருட்களையும், இடுப்பில் குழந்தைகளையும் வைத்துக் கொண்டு லட்சக்கணக்கான வட மாநிலத் தொழிலாளர்கள் நடந்தே தங்கள் ஊருக்குப் போனார்கள். அவுரங்காபாத் ரயில் பாதையில் நடந்து சென்றவர்கள் (8.5.2020) களைப்பால் அதிலேயே படுத்து தூங்க - ரயில் ஏறி 16 பேர் பரிதாபமாக செத்தார்கள். இதை விடக் கொடூரமான சம்பவம் வேண்டுமா?

பொதுமுடக்கக் காலத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒன்றிய அரசு கொடுத்த நிதி உதவி என்ன? உணவு உதவி என்ன? உயிர் உதவி என்ன? ஏதுமில்லை.

**யோகி ஆதித்யநாத் ஆளும் உத்தரப்பிரதேச அரசில் மக்களுக்கு ஆக்சிஜன் கிடைக்கவில்லை. இது குறித்து அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் ஒருவர் பொதுநல வழக்குத் தாக்கல் செய்தார். அந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், ‘சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் ஆகியும் மக்களுக்கு ஆக்சிஜன் வழங்க முடியாதது வெட்கக்கேடானது. அரசு மருத்துவமனைக்குச் சென்றால் கொரோனாவுக்கு இறக்காதவர்கள் டெங்குவால் இறந்துவிடுவர்’ என நீதிமன்றம் வேதனை தெரிவித்தது. ‘ஆக்ஸிஜன் தட்டுப்பாடு உள்ளது என யாராவது கூறினால் அவர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் பாயும்’ என யோகி ஆதித்யநாத் தெரிவித்தார். ‘உத்தரப்பிரதேச கொரோனா நிலவரம் மோசமாக உள்ளது என செய்திகள் பரப்பப்பட்டால் அவர்கள் சொத்துகள் பறிமுதல் செய்யப்படும்’ என யோகி ஆதித்யநாத் அறிவித்தார். மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த தன் தாத்தாவுக்காக, ஆக்சிஜன் கேட்டு ட்விட்டரில் பதிவிட்ட இளைஞர் மீது, உத்தரப் பிரதேச காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. கொரோனா ஊசிக்குப் பதிலாக நாய்க்கடி ஊசி போட்ட மாநிலம் அது.**

**பிரதமர் தொகுதியான வாரணாசியிலும் ஆக்சிஜன் தட்டுப்பாடுதான் இருந்தது. வாரணாசியில் உள்ள ஒரு கிராமத்துக் குழந்தைகள் சாப்பிட எதுவும் கிடைக்காமல் புல் சாப்பிடுவதாக படத்துடன் செய்தி வெளியிட்ட ஆங்கிலப் பத்திரிக்கையாளர் மீது வழக்குப் போடப்பட்டது. இரட்டை எஞ்சின் ஆட்சி மக்களை எப்படிக் காக்கும் என்பதற்கு உத்தரப்பிரதேச உதாரணம் போதும்!**

அதிகாரத்தையும் ஆட்சியையும் கையில் வைத்திருந்த மோடி அதைப் பயன்படுத்தாமல் மக்களை கை தட்டச் சொன்னார். பாத்திரங்களைத் தட்டச் சொன்னார். வாசலில் விளக்கு ஏற்றச் சொன்னார். இருண்ட காலம் தான் தனது ஆட்சி என்பதை அவரே உணர்த்துவதாக இருந்தது இந்தச் செய்கைகள்.

**‘நன்றாகக் கை கழுவிக் கொள்ளுங்கள்’ என்றார் மோடி. மக்களைக் கை கழுவிவிட்டு!**

●●

# தோழமை தொடர்வோம் !
# களத்தினில் வெல்வோம் – ஒன்றாக!
## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!









**சென்னை, மார்ச் 27–**

**தோழமை தொடர்வோம்! களத்தினில் வெல்வோம் ஒன்றாக என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**

*● தோழமைக் கட்சிகளின் விருப்பத்தையும், புதிய கட்சிகள் நம் கூட்டணியில் இணைந்துள்ள சூழலையும் உணர்ந்து ஜனநாயகப்பூர்வமாகத் தொகுதிப் பங்கீட்டை நிறைவு செய்துள்ளோம்!*

*● தோழமை இயக்கங்களுக்கு நான் அளித்துள்ள வெற்றி உத்தரவாதத்தை நிறைவேற்ற உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் உறுதிபூண்டுள்ளதை நேர்காணலில் நன்குணர்ந்தேன்.*

*● 234 தொகுதிகளும் நம் தொகுதிகள்தான்! கூட்டணிக் கட்சிகளின் சின்னங்களும் நம் சின்னங்கள்தான்!*

*● #DravidianModel 2.0-விலும் தோழமை தொடர்வோம்! களத்தினில் வெல்வோம்_ ஒன்றாக!*

**இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியளித்துள்ளார்.**

சட்டப் பேரவைத் தேர்தல் 2026

## மாற்றுத்திறனாளிகள் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, மார்ச் 27–

2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் 100 சதவீதம் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பான மாற்றுத்திறனாளிகள் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (25.3.2026) சென்னை ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்ட 12,505 மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், வாக்களிப்பது தொடர்பான விழிப்புணர்வுப் பணிகள் மேற்கொள்ளுவது தொடர்பாக 21 வகையான மாற்றுத்திறனாளிகளின் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

இதில், மாற்றுத்திறனாளிகள் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் செல்வதற்கு ஏதுவான உள் மற்றும் வெளியேறும் வழிகள், சாய்வுதளம் மற்றும் கைப்பிடிகள், வாக்குச்சாவடிகளுக்கு அருகில் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கென பிரத்யேக வாகன நிறுத்துமிடம் அமைத்தல், சக்கர நாற்காலி மற்றும் ஊன்றுகோல் பயன்படுத்தும் மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற நடைபாதை வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வகையில் தன்னார்வலர்கள் ஏற்பாடு செய்தல், மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான வாக்காளர் உதவி மையம், முதலுதவிப் பெட்டி, ஆம்புலன்ஸ் சேவைகள் ஏற்படுத்துதல், குடிநீர், கழிவறை, வாக்குச்சாவடி நுழைவு வாயிலில் எளிதில் அணுகக் கூடிய வழிகாட்டுதல்கள் மற்றும் அடையாளப் பலகைகள் உள்ளிட்ட தேவையான வசதிகள் அமைத்திட வேண்டும் என தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## வேட்பு மனு தாக்கல் கால அளவு:
### தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு!

சென்னை, மார்ச் 27–

வேட்பு மனு தாக்கல் குறித்து தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு வருமாறு:-

2026ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடும் நாள் 30.03.2026 (திங்கட்கிழமை) முதல் 06.04.2026 (திங்கட்கிழமை) வரை காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம், 1881ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின்கீழ், பொது விடுமுறையாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 31.03.2026 (செவ்வாய்க்கிழமை), 01.04.2026 (புதன்கிழமை), 03.04.2026 (வெள்ளிக்கிழமை) மற்றும் 05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வேட்புமனு தாக்கல் செய்ய இயலாது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய கடைசி நாள் 06.04.2026 (திங்கட்கிழமை) ஆகும். இவ்வாறு தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

முரசொலி அலுவலக

தொலைபேசி எண் மாற்றம்!

புதிய எண்

044 - 4584 9900

புல்லட் ரயில் அறிவிப்பில் தமிழ்நாடு முற்றிலும் புறக்கணிப்பு!

## ஒன்றிய அரசின் எதேச்சதிகாரப் போக்கிற்கு தமிழ்நாட்டு மக்கள் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள்!

### கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!



*புதுடெல்லி, மார்ச் 27–*

*தமிழ்நாடு உட்பட நாடு முழுக்க அறிவிக்கப்பட்டுள்ள புல்லட் ரயில் திட்டங்களின் முக்கிய விவரங்களைக் கேட்டு, நாடாளு மன்றத்தில் ரயில்வே அமைச்சகத்திடம் ஈரோடு கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார். இதற்கு கிடைத்திருக்கும் பதில்கள், தமிழ்நாட்டின் தேவைகளை சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.*

*மஹாராஷ்டிரா, குஜராத், உத்தரப்பிரதேச மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிலையில், நாட்டிற்கு அதிக வரித்தொகையை செலுத்தும் தமிழ்நாடு இப்படி புறக்கணிக்கப் பட்டிருப்பது, ஒன்றிய பா.ஜ.க அரசின் எதேச்சதிகாரத்தையும் தமிழ் மக்களின் மீதான பாரபட்சத்தையும் காட்டுகிறது.*

**1. ரயில்வே திட்டங்களில் தமிழ்நாடு மீது தொடரும் பாரபட்சம்:**

*ரயில்வே திட்டங்களில் தமிழ்நாடு புறக்கணிக்கப் படுவது புதிய விவகாரம் அல்ல. இந்த ஆண்டு ரயில்வே பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு மொத்தமாகவே 7000 கோடி ரூபாய் என்ற குறைவான தொகையே ஒதுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டின் சார்பில் முன்வைக்கப்பட்ட புதிய ரயில் வழித்தடங்கள், ஏற்கனவே இருக்கும் வழித்தடங்களில் கூடுதல் ரயில்கள், ரயில் நிலையங்களின் மேம்பாடு போன்ற பல முக்கியக் கோரிக்கைகள் கிடப்பில் போடப்பட்டன.*

*எனது தொகுதியான ஈரோட்டின் ரயில்வே தேவைகள் குறித்து, ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகிறேன்.*

*இவற்றில் தொடர் அழுத்தத்திற்கு பணிந்து சில கோரிக்கைகளை ஒன்றிய அரசு நிறைவேற்றுவதாக ஒப்புக்கொண்ட நிலையில், பல கோரிக்கைகள் இன்னும் கவனத்தில் கொள்ளப்படாமலேயே இருக்கின்றன.*

*இதன் அடுத்தகட்டமாக, புல்லட் ரயில் திட்டங்களிலும் தமிழ்நாட்டின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது.*

**2. மகாராஷ்டிராவிற்கு ஒரு நியாயம், தமிழ்நாட்டிற்கு ஒரு நியாயமா?**

*மஹாராஷ்டிராவில் ஏற்கனவே மும்பை அகமதாபாத் புல்லட் ரயில் சேவை பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் தற்போது மும்பை புனே புல்லட் ரயிலும் அந்த மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக புல்லட் ரயிலில் Inter state தன்மைக்கே முன்னுரிமை அளிக்கப்படும் சூழலில், மஹாராஷ்டிராவிற்கு மட்டும் அந்த விதி தளர்த்தப்பட்டு Intra state ரயில் ஒதுக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாட்டில் தெற்கு மற்றும் மேற்கு மாவட்டங்களின் முக்கிய நகரங்களை இணைக்க, பல ஆண்டுகளாக புல்லட் ரயில்கள் கேட்கப்பட்டு வருகின்றன. ஆனால், இது பற்றி எந்த அக்கறையும் காட்டாமல், மஹாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களுக்கு அனைத்தையும் ஒதுக்கி, தமிழ்நாட்டை கைவிட்டிருக்கிறது ஒன்றிய அரசு.*

**3. முதலமைச்சரின் தலைமையில் ‘தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்’:**

*தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில், தமிழ்நாடு மாநிலம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி நடை போட்டுக் கொண்டிருக்கிறது. ஜிடிபி, தனிநபர் வருமானம், தொழில் வளர்ச்சி உள்ளிட்ட அனைத்து அலகுகளிலும் அவரது சாதனைகள் வரலாற்றை மாற்றி எழுதிக் கொண்டிருக்கின்றன. இதற்கு ஊடகங்களும், அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளும், ஒன்றிய அமைச்சகங்களும் வெளியிடும் தரவுகளே சாட்சி.*

*ஒன்றிய அரசின் எதேச்சதிகாரத்தை முறியடித்து தமிழ்நாட்டிற்குத் தேவையானவற்றை பூர்த்தி செய்வதில் புகழ்பெற்ற அவர், ரயில்வே திட்டங்களிலும் ஒன்றுவிடாமல் கொண்டு வந்து சேர்ப்பார். அவர் தலைமையில் “தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்”.*

*வரும் தேர்தலில், தமிழ்நாட்டை புறக்கணித்து மகிழும் ஒன்றிய பா.ஜ.க அரசிற்கு தக்க பாடம் புகட்டுவோம்!*

*இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.*

பன்னாட்டுத் தமிழுறவு மன்றத்தின் சார்பில் – கனடா எழுத்தாளர்

## கவிஞர் வீணை மைந்தனுக்கு வரவேற்பு! பெருங்கவிக்கோ உரையரங்கம்!

### வா.மு.சே. திருவள்ளுவர் தலைமை! கவிஞர் வீணை மைந்தன் சிறப்புரை!

*சென்னை, மார்ச் 27–*

*பன்னாட்டு தமிழுறவு மன்றம் சார்பில் - கனடா எழுத்தாளர் கவிஞர் வீணை மைந்தனுக்கு வரவேற்பு மற்றும் கனடாவில் பெருங்கவிக்கோ உரையரங்கம் நாளை (28.3.2026) மாலை 5.30 மணியளவில் வடபழனி அஞ்சலகம் எதிரில் உள்ள அண்ணா நூலகத்தில் நடைபெறுகிறது.*

*இந்நிகழ்வில் செம்மொழி சா.மணிவண்ணன் வரவேற்கிறார். வழக்கறிஞர்கள் கிருட்டிணமூர்த்தி, சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இந்நிகழ்வுக்கு தமிழ் மாமணி வா.மு.சே. திருவள்ளுவர் தலைமை வகிக்கிறார்.*

*கவிஞர் வீணை மைந்தன் சிறப்புரையாற்று கிறார். கவிஞர் காவிரி மைந்தன் வாழ்த்துரை வழங்குகிறார். தில்லை பாட்கர் தொகுப்புரை யாற்றுகிறார்.*

*கவிச்சிங்கம் கண்மதியன் தலைமையில் நடைபெறும் கவியரங்கத்தில் கவிஞர்கள் 16 வரிகளுக்குள் கவி பாடுவர்.*

*கவிஞர் மூ.வீரமுத்து நன்றி கூறுகிறார்.*